**இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் 2000ஆம் ஆண்டும் அதற்குப் முன்னரும் நடைபெற்ற க.பொ.த. (சா/தர), க.பொ.த. (உ/தர)ப் பரீட்சைகளின் சான்றிதழ்களுக்காக விண்ணப்பித்தல்**

தற்போது நிலவும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நமது திணைக்களத்தின் ஒருநாள் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதனால் பின்வரும் முறைகளின் ஊடாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சைச் சான்றிதழ்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

I. 2001ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற க.பொ.த. (சா/தர), க.பொ.த. (உ/தர)ப் பரீட்சைகளின் சான்றிதழ்களுக்காக ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு நிகழ்நிலையில் விண்ணப்பிக்க வேண்டும். இதற்காக https://certificate.doenets.lk/ > "Request Certificates" இற்குப் பிரவேசியுங்கள்.

II. 2000ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் நடைபெற்ற க.பொ.த. (சா/தர), க.பொ.த. (உ/தர)ப் பரீட்சைகளின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக.

1. குறித்த சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பின்வரும் இணைப்பின் ஊடாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.
   சிங்கள/ஆங்கில மொழிமூல விண்ணப்பப்படிவம் :
   https://doenets.lk/documents/downloads/certificates-application-forms/OnedayS.pdf
   தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவம் :
   https://doenets.lk/documents/downloads/certificates-application-forms/OnedayT.pdf

2. விண்ணப்பப்படிவத்தை அச்சிட்டு **சரியாகப்** பூரணப்படுத்துக. (விசேடமாக உங்கள் தபால் முகவரி) **நீங்கள் பாரீட்சைக்குத் தோற்றிய பெயரிலேயே உங்களுக்குரிய சான்றிதழ் விநியோகிக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க.**

3. நீங்கள் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் சான்றிதழ் வகை, பிரதிகளின் எண்ணிக்கை (அதிகபட்ச பிரதிகளின் எண்ணிக்கை 3 ஆகும்) ஆகியவற்றின் அடிப்படையில் உரிய கொடுப்பனவை இலங்கை வங்கியின் பின்வரும் கணக்கிலக்கத்தில் வைப்பிலிட்டு குறித்த பற்றுச்சீட்டை அல்லது திரைக்குறிப்பை (screenshot - நிகழ்நிலைக் கொடுப்பனவுகளுக்கு மாத்திரம்) பெற்றுக்கொள்க.

| சான்றிதழ் வகை | 1 பிரதி | 2 பிரதிகள் | 3 பிரதிகள் |
|---|---|---|---|
| **இலங்கைக்குள் பயன்படுத்துவதற்காக** | ரூ. 700/= தபாற்கட்டணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ரூ. 1000/= தபாற்கட்டணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ரூ. 1300/= தபாற்கட்டணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| **வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்காக (வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் பெற்றுக்கொள்ள வேண்டும்.)** | ரூ. 600/= (ஒரு பிரதியை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.) | | |
| **Australian Visa** | ரூ. 700/= தபாற்கட்டணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ரூ. 1000/= தபாற்கட்டணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ரூ. 1300/= தபாற்கட்டணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| **Green Card** | ரூ. 600/= (ஒரு பிரதியை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்.) | | |
| **Foreign Country (வான்வழி பதிவுத்தபால் மூலம்)** | ரூ. 900/= (தபாற்கட்டணம் ரூ.300/= உள்ளடக்கப்பட்டுள்ளது.) | | |

இலங்கை வங்கியின் கணக்கிலக்கம் : **7041228**

கணக்கின் பெயர் : **இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

கிளை : **பத்தரமுல்லை**

4. doecertificates@gmail.com என்ற இணையத்தள முகவரிக்கு பின்வரும் ஆவணங்களை இலத்திரனியல் தபால் மூலம் அனுப்புக.
   - முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பப்படிவம்
   - பணம் செலுத்தப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான பற்றுச்சீட்டு அல்லது திரைக்குறிப்பு (Screenshot)
   - தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் தெளிவான படப்பிரதி அல்லது வருடல் செய்யப்பட்ட (scanned) பிரதி. Australian Visa சான்றிதழ்களுக்காக செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் நிழற்பிரதி (Passport copy) **கட்டாயமாகும்.**
5. இலத்திரனியல் தகவலின் தலைப்பு (Title) குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில் "Exam Certificates" என்பதனைக் குறிப்பிட்டு, "சான்றிதழ் விண்ணப்பிக்கும் திகதி", "தொலைபேசி இலக்கம்" ஆகியவற்றை மாத்திரம் உள்ளீடு செய்க.
   - இலங்கையில் பயன்படுத்துவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள், விண்ணப்பித்து மூன்று நாட்களுக்குள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு speed post சேவை ஊடாக தபால் மூலம் அனுப்பப்படுவதுடன் வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பப்படும்.
   - தொடர்புடைய அனைத்து தகவல்களும் சான்றிதழ்களின் தொடர் இலக்கங்களும் உங்கள் இலத்திரனியல் தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

- நீங்கள் Green Card இற்கான சான்றிதழுக்காக விண்ணப்பிப்பீர்களாயின், நாம் உங்களுக்கு அனுப்பும் இலத்திரனியல் பதில் தபாலில் குறிப்பிடப்படும் சான்றிதழ் தொடர் இலக்கத்தை அமெரிக்கத் தூதரகத்துக்குக் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுங்கள். அதன்போது தூதரகப் பிரதிநிதியொருவர் வருகைதந்து பரீட்சைத் திணைக்களத்திலிருந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வார்.
- விண்ணப்பதாரி உரிய தகவல்களை (உதாரணம்: பரீட்சையின் பெயர், பரீட்சை வருடம், சுட்டெண் போன்றன) **சரியாக** வழங்கியிருந்தால் மாத்திரமே மேற்குறித்த செயலொழுங்கின் மூலம் சான்றிதழ்களை விநியோகிக்க முடியும்.
- பூரணமற்ற, தெளிவற்ற விண்ணப்பப்படிவங்கள் அல்லது பற்றுச்சீட்டுகளைக் கொண்ட கோரிக்கைகள், தேவையான சகல ஆவணங்களையும் கொண்டிராத கோரிக்கைகள் என்பன எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
- சான்றிதழ்களின் பிரதிகள் இலத்திரனியல் தபால் ஊடாக வழங்கப்பட **மாட்டாது.**
- பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கைகள் பரீட்சைத் திணைக்களத்தில் காணப்பட்டால் மாத்திரமே சான்றிதழ்கள் விநியோகிக்கப்படும்.